**O.S. No. 104 /2015**

**Date: 19.11.2025**

**பி. வா.சா.1. காசிநாடார்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் விவரங்களை எனது வழக்கறிஞர் என்னிடம் படித்து கூறினார். 1ம் பிரதிவாதி எனது அண்ணன் கோபால் என்ற கோபாலகிருஷ்ணனின் மகள். 2,4 ம் பிரதிவாதிகள் எனது அண்ணன் மற்றும் தம்பி ஆவார். எதிர் வழக்கினை தாக்கல் செய்ய நாங்கள் 1–4 பிரதிவாதிகள் தான் விவரம் சொன்னோம். 1ம் பிரதிவாதி தற்போது வழக்கை நடத்துகிறார். 1ம் பிரதிவாதி முருகேஷ்வரி என்பவர் இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு எழுத்து மூலமாக அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 4 சொத்துக்கள் தபசில் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்களின் விவசாய நிலங்கள் சேர்ந்தமங்கலம் கிராமத்திலும், குடியிருப்பி வீடு திருமலாபுரம் கிராமத்திலும் உள்ளது என்றால் சரிதான். பிராதில் 4 வது தபசில் 5 வது அயிட்ட குடியிருப்பு சொத்தில் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் வாடகைக்கு குடியிருந்து வருகிறார். வாதி யாரிடம் வாடகைக்கு எப்போது எடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் கிடையாது. பிரதிவாதிகளான எங்களிடம் வாதி வாடகைக்கு எடுக்கவில்லை என்றால் சரிதான். கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் சொல்லி தான் வாதி அந்த வீட்டில் இருந்தார் என்றால் அவர் சொல்லி தான் வாடகைக்கு இருந்தார்.கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் எங்களுடன் கூட்டுக் குடும்பமாக இருந்தார். முத்தம்மாளுடன் கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் குடியிருக்கவில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். என்னுடைய சகோதரர் வைத்தியலிங்க நாடார், ராமசாமி நாடார் மற்றும் எனக்கு தனித்தனி குடியிருப்பு வீடுகள் உள்ளது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும் தனி குடியிருப்பு வீடு உள்ளது. கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர்

குடியிருக்கும் வீட்டுக்குத்தான் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படியார் குடும்ப அட்டை வழங்கப்பட்ட வீடு பிராது 4 ம் தபசில் 5 ம் அயிட்ட சொத்து என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் வைத்தியலிங்க நாடார், ராமசாமி நாடார் மற்றும் நான் குடியிருக்கும் வீட்டுகளுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் என்னுடனோ அல்லது வைத்தியலிங்க நாடார், ராமசாமி நாடார் ஆகிய எங்களுடன் கூட்டுக் குடும்பமாக இருந்தார். எங்களுடைய குடும்ப அட்டையிலோ வைத்தியலிங்க நாடார், ராமசாமி நாடார் ஆகியோர்களின் குடும்ப அட்டையிலோ கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரின் பெயர் துலங்காது என்றால் சரிதான். 1 ம் தபசில் சொத்து பட்டா எண். 758 ன் படி கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு தனித்துப் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கு எங்கள் பெயரில் பட்டா கிடையாது. மேற்படி சொத்துக்கு கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவரின் பெயரில் தான் பட்டா உள்ளது. மின் இணைப்பு பெறுவதற்காக கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் என்பவர் பெயரில் பட்டா பெறப்பட்டது. மேற்சொன்ன சங்கதிகளை எனது எதிர் வழக்குரையில் நிரூபண உறுதி கூற்றிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்து எனது தந்தை சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எங்கள் வழக்கில் சொல்லவில்லை. 2 ம் தபசில் சொத்து கோபால் என்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் ராமசாமி ஆகியோர்களின் பெயருக்கு 01.02.1999 ம் தேதியில் பதியப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.